# ஏன் இந்த பறப்பு பறக்கினம்?

**சுந்தரி**
*(ஒரு பேப்பருக்காக )*

இஞ்ச பாருங்கோ நான் ஒன்றும் உங்களுக்கு அறிவுரை சொல்லவரவில்லை என்ர வயித்தெரிச்சலைக்சொல்லாம் என்று வந்திருக்கிறன். நான் சொல்ல வேணும் என்று நினைக்கிற ஆள்களுக்கு உத வாசிக்க நேரமிருக்குதோ இல்லையோ தெரியாது, ஆனால் உத வாசிக்கிறவைகள் தயவுசெய்து ஒருக்கால் அவையளை தட்டி சொல்லி விடுங்கோ.

கம்பங் கூத்தாடினாலும் பாருங்கோ காசு வேண்ட கீழதான் இறங்கி வரவேணும். எவ்வளவுதான் பறப்பு பறந்து உழைத்தாலும், வெளியில் எவ்வளவுதான் பேரும் புகழுடன் இருந்தாலும் ஒரு குடும்பம் என்று வரும் போது மனைவி, பிள்ளைகளும் அதற்கு அணைவாக இருந்தால்தான் அதற்கு ஒரு அர்த்தம் இருக்கும். இல்லாவிட்டால் கண்ணைக்கட்டி விட்ட குதிரை போல ஓடோடு என்று ஓடி உழைத்து விட்டு திருப்பி பார்த்தால் மனைவி இல்லாமல் இருப்பாள் அல்லது என்ர மனிசன் எப்பவும் பிசி என்று நடைபிணமாகவோ அல்லது சீரியலில் உறைந்துவிட்ட சிலையாக இருப்பாள். பிள்ளைகளுக்கும் அப்பா பிள்ளை என்ற உறவு இல்லாமல் வீட்டில் வாடகைக்கு இருக்கும் நபர் போலவும், காசு உழைக்கும் ஒரு இயந்திரம் போலவும் பட்டுப்படாமல் இருப்பார்கள். என்ன நடந்தது? எங்க பிழைவிட்டன் என்று யோசிப்பது காலம் கடந்து விட்ட ஞானமாகிவிடும்.

இப்ப இலங்கை தமிழர்கள் வியாபாரம் என்றாலும் சரி, கலை என்றாலும் சரி, ஏன் பொதுத் தொண்டு என்றாலும் சரி, அந்த மாதிரி, 7 - 11 தான். இப்படியாக விடையங்களில் ஏழு நாளையும் செலவழிப்பவர்கள், தமது வேலைகளில் மனைவியையும் பங்கெடுக்க வைக்கும் அதே நேரத்தில், தமது நேரத்தில் கொஞ்சத்தை பாரம்பரியமாக பெண்களுக்கான வேலை என ஒதுக்கும் சமையல், பிள்ளைகளை கவனித்தல் போன்றவற்றில் பங்கெடுத்தால் புரித்துணர்வு அதிகமாவதற்கு வாய்ப்புண்டு. சில ஆண்களை பொறுத்த வரையில் மனைவியிடம் ஒவ்வொரு நாளும் ஒரு 15 நிமிடமாவது மனம்விட்டு கதைப்பதை விட, மாதம் ஒரு புடவையோ, சின்னதாக ஒரு நகையோ, அல்லது வாரம் ஒருமுறை இரண்டு சீடிக்கை வேண்டி வந்து விட்டு பிறகென்ன நான் மனிசியை சந்தோசமாகத் தானே வைத்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிக்கிறார்கள்.

அதே போல இந்த பொது வேலைகளில், கலை, எழுத்து சார்ந்த துறைகளில் ஈடுபடுபவர்களும் நாம் அதற்கெனவே பிறப்பெடுத்தது போல புகழ் தரும் போதையில் இருப்பார்கள்.

அண்மையில் ஒருவர் தனது பொது சேவையைப் பற்றி சொல்லிக்கொண்டிருந்த போது அவரிடம் உங்கள் மனைவியிடம் என்ன திறமை உள்ளது, அவர்களுக்கு எதில் ஈடுபாடு உள்ளது என்று கேட்டபோது அந்த மேதாவி சொன்ன பதில் அவவிடம் என்ன திறமை உள்ளது என்று எனக்குத் தெரியாது ஆனால் அவவுக்கு பிள்ளைகள், பிள்ளைகள் படிப்பு, சமையல் என்று ஒன்றுக்கும் நேரமில்லை, அதனால் இப்படியான இடங்களுக்கு வாறதில்லை. இதற்கு நான் என்ன சொல்ல...

சந்தர்ப்பமும், நேரமும் தான் ஒருவரின் திறமையை அடையாளம் காட்டுகின்றது. சந்தர்ப்பமும் கிடைக்காது, அதற்கு நேரமும் இல்லாமல் குழந்தை, சமையல், வேலை என்று அதற்கு கணவனின் பங்களிப்பும் இல்லாமல் குடும்ப அலுவல்களை தனித்து கவனிக்கும் பெண்கள் அதிகமான மனவுளைச்சலுக்கு உள்ளாகுகிறார்கள். அதிலும் நெருங்கிய குடும்ப உறவினர்கள் அருகில் இல்லாது தனித்திருக்கும் பெண்களுக்கு அது மனநோய்க்கு இட்டு செல்லும் காரணியாகிறது.

எமது பெண்களில் பலர் குடும்பம் பிள்ளை என்று வந்ததும் தமது விருப்பு வெறுப்பு முன்னேற்றம் எல்லாவற்றையும் விட்டு விட்டு தம்மை முழுமையாக குடும்பத்திற்கென அர்பணிக்கிறார்கள் அதை அடையாளம் கண்டு, புரிந்துணர்வைக்காட்டாது, தட்டிக் கொடுக்காது, என் அம்மா, அம்மம்மா எல்லாம் இப்படித்தான் இருந்தார்கள், நீயும் இரு என்பது போல நடப்பதுவும், கொஞ்ச காலம் போக அவள் தன்னை கவனியாது எடை போட்டதும்.. அழகு குறைந்து விட்டது என்று விமர்சிப்பதும் அப்பெண்ணுக்கு சுயபச்சாபத்தை (Self –pity) ஏற்படுத்தி தாழ்வுமனப்பான்மையை உண்டு பண்ணுகிறது.

மனைவியின் நிலையில் இருந்து கணவனும், கணவனின் நிலையில் இருந்து மனைவியும் சிந்தித்து உணர்வுகளை ஒரு தோழமை அன்புடன் சீர் தூக்கிபாக்கும் காதல் வேண்டும். அரைவாசி மட்டும் நிறைந்துள்ள குவளை ஒன்றைப் பார்ப்பவரில் ஒருவர் அதனை அரைவாசி குறைந்துள்ளது என்கிறார், இன்னெருவர் அரைவாசி நிறைந்துள்ளது என்கிறார். எல்லாமே பார்க்கும் பார்வையில் உள்ளது. காதல் வேண்டும். அன்பு வேண்டும். அது எப்பவும் நிறைவான கோணத்தில் இருந்தே பார்க்கும். என்னைக் கேட்டால் காதலை வெளிப்படுத்த தெரியாதவர்களும், காதலே இல்லாதவர்களும், அதற்கு நேரம் இல்லாதவர்களும் கல்யாணமே கட்ட கூடாதென்பேன்.

சில குடும்பங்களில் குடும்பத்தின் வருமான பொறுப்பு முழுவதும் கணவனின் கையில் இருக்கும் மனைவிக்கு அதில் பங்கெடுக்க நேரமில்லால் இருப்பதோடு, சிலருக்க அது பற்றி அக்கறையே இல்லாது தானும் குழந்தைகளோடு குழந்தையாக புது புடைவை வேணும், புது டிசைன் நகை வேணும் என்று ஒரு பட்டியல் எப்பவும் தயாராக வைத்திருப்பார்கள். இது கணவனை கடனாளியாக்குவதோடு, மீளளிக்க முடியாத நிலைக்கும் உண்டு பண்ணி மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.

எனது அப்பா உழைத்தார், அம்மா செலவழித்தா என்று இல்லாது காலத்திற்கு ஏற்றது போல வரவு, செலவுகள் மனைவிக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

புரிந்துணர்வுக்குக் கூட நேரமில்லாமல் ஒரே பறப்பாக பறந்து கொண்டு திரிந்தால் குடும்பம் குலையும் போது சில நேரங்களில் கொடுக்கும் விலை ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமைந்துவிடும்.

## மீண்டும் தமிழரைக் குறிவைத்த இயற்கை அன்னை

மியான்மார் நாட்டைத் தாக்கிய நர்கீஸ் புயலினால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

கொல்லப்பட்ட தமிழர்களின் எணணிக்கை தொடர்பாக முன்னுக்குப் பின் முரணானதான தகவல்கள் வெளிவந்திருக்கின்ற போதிலும் சுமார் 30000 இற்கும் 40000 இற்கும் இடைப்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. அத்துடன் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

மியானமாரில் தமிழர்கள் செறிந்து வாழும் ஐராவதி டெல்டா பகுதியும் பகோ மாகாணமும் றங்கூனைச் சுற்றியுள்ள பகுதிகளுமே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. முழுக்க முழுக்க தமிழர்கள் வாழ்ந்த திங்காஜூன், டவுன்டகோன் முதலிய கிராமங்கள் முற்றாக அழிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை பாதிக்கபட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் கூட சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லை எனவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உதவிகள் தொடர்பாக தமிழ் நாட்டிலிருந்தும் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்ற போதிலும் தமிழ் நாடு அரசின் மெத்தனப் போக்குக் குறித்தும் தமிழ் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்


**சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?**

**ELC Solicitors**
Understanding your needs…

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"…This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

*- Karen Sommers*

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

**SPECIALISTS IN:**

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

ELC Solicitors
Understanding your needs…

**COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE**

**CALL US TODAY!**

**0800 027 8977**

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE
www.elcsolicitors.com